தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்,பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் டி.அமுதரசன்,சமூக வலைத்தள பயிற்சியாளர் அன்பகம் இளமாறன் ஆகியோர் சமூக வலைத்தள பயிற்சி அளித்தனர். உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், தொகுதி பார்வையாளர் எவரஸ்ட் நரேஷ்,தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்.மகேஷ்குமார், கோடீஸ்வரன், தங்கசெழியன்,நாசர்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்தார்த்தன், ஒன்றிய கழக செயலாளர்கள்,பேரூர்கழக செயலாளர்கள்,மற்றும் 300 க்கும் மேற்பட்ட பாக இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி. கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், மேல்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் நிவேதா க/பெ.ராஜ்குமார் என்பவருக்கு இலவச வீட்டுமனை பட்டா திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். அதுபோது வட்டாச்சியர் சரவணகுமாரி, மாவட்ட பொருளாளர் எஸ்.ரமேஷ், கும்முடிப்பூண்டி பேரூர் செயலாளர் இரா.அறிவழகன், சுற்றுசூழல்அணி மாவட்ட அமைப்பாளர் மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், எம். கேசவன், எஸ்.உதயகுமார். அப்துல்கரீம், கே.ஜி.நமச்சிவயம், கே.வி.ரவி, பாலுமகேந்திரன், கிரிஜாகுமார், மெய்யழகன், காளிதாஸ், உடன் இருந்தனர்.

‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் கீழ் 2 கோடியாவது பயனாளிக்கு

விழுப்புரத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மருந்துப் பெட்டகங்கள் வழங்குகிறார்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

ஈரோடு, நவ. 23-

முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் 29.11.2024 அன்று நடைபெறவுள்ள அரசு நிகழ்ச்சியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் 2 கோடியாவது பயனாளிக்கு மருத்துவ பெட்டகத்தினை வழங்கி சிறப்பிக்கவுள்ளார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தாளவாடி வட்டம், சேஷன் நகர் பகுதியில் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், சேஷன் நகர் பகுதியில் நேற்று முன் தினம் (21.11.2024) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்துள்ளதாவது:-

நம்முடைய மாவட்டத்தில் நிறைய திட்டங்களுக்கான வாய்ப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். தாளவாடி மலைப்பகுதியில் மிகுந்த அக்கறை கொண்டு பல திட்டங்களை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் அந்தியூர், சத்தியமங்கலம், தாளவாடி ஆகிய வருவாய் வட்டங்களில் ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர் களுக்கு மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தாளவாடி பகுதியில் வீட்டுவசதி வாரியம் சார்பில் ஏறத்தாழ 300 வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-

ஈரோடு மாவட்டத்தில் இன்றைய தினம் மொத்தம் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், சீமாங் கட்டிடம், ஒருங்கிணைந்த சேவை மையக் கட்டிடம், ரோட்டரி கட்டிடம் மற்றும் ஒளிரும் கட்டிடம் என இது வரை ரூ.118.49 கோடி செலவில் பல்வேறு மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

708 நகர்ப்புற நலவாழ்வு மையம்!

ஈரோடு மாவட்டத்தில் 375துணை சுகாதார நிலையங்கள், 76 ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகம் , 1 மாவட்ட தலைமை மருத்துவமனை, 2 வட்டம் சாரா மருத்துவமனை, 5 வட்டார மருத்துவமனை, 1 மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி 708 நகர்ப்புற நலவாழ்வு மையம் அமைக்கும் வகையில், ஈரோடு மாநகராட்சியில் 21, கோபிசெட்டிபாளையம் நகராட்சி 1 என 22 நலவாழ்வு மையங்களில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாநகராட்சியில் 17, கோபிசெட்டிபாளையம் நகராட்சி 1 ஆகிய 18 இடங்களில் திறந்து வைத்துள்ளார்கள். மேலும், ஈரோடு மாநகராட்சி பகுதியில் 4 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. மானியக் கோரிக்கை அறிவிப்புகள் 202425ல் ரூ.19.80 கோடி மதிப்பீட்டில் 16 அறிவிப்புகளின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவ கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், ரூ.8.5 கோடி மதிப்பில் ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், எம்.ஆர்.ஐ.ஸ்கேன் கருவி, ரூ.87 இலட்சம் மதிப்பில் மகப்பேறு சிறப்பு மையம் மற்றும் மொடக்குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் மல்டிபாராமானிட்டர் மற்றும் கோபி செட்டிபாளையம் அரசு மருத்துவமனை, மொடக்குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் இதர கருவிகள் வழங்கப்படும்.

ஈரோடு, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் ரூ.3.31 கோடி மதிப்பீட்டில் சமூக அளவிலான புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள்” முகாமானது ஈரோடு மாவட்டத்தில்” 22.11.2023 அன்று காளிங்கராயன்பாளையம், துணை சுகாதார நிலையத்தில் தொடங்கி வைக்கப்பட்டதில் 10,24,998 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 123 நபர்கள் தொற்று உள்ளவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு புற்றுநோய் சிகிச்சைக்கான தேவையான கோபால்ட் கருவி 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் எல்லாம்!

மேலும் தாளவாடி மக்கள் பிரேத பரிசோதனைக்கு சத்தியமங்கலம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதாகவும், இப்பகுதிக்கு என பிரேத பரிசோதனை கூடம் அமைத்துத்தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று ரூ.78.00 இலட்சம் மதிப்பில் பிரேத பரிசோதனை கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்த அரசு மக்களுக்கான அரசு. மக்களின் கோரிக்கைகளை ஏற்று உடனடியாக நிறைவேற்றக்கூடிய அரசு. முதலமைச்சர் அவர்கள் எல்லாருக்கும் எல்லாம் என்கின்ற சிறப்பான ஆட்சியை நடத்தி வருகின்றார்

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, அமைச்சர்கள் சு.முத்துசாமி, மா.சுப்பிரமணியன் ஆகியோர் 10 பயனாளிகளுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகத்தினையும், 5 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், காசநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த 2 நபர்களுக்கு ஊட்டச்சத்து தொகுப்பினையும் வழங்கினார்கள்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

கழகத் தொண்டரணி சார்பில் எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, நவ.23-

தி.மு.க. தொண்டர் அணி, மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேற்று (22.11.2024 வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணிக்கு தொண்டர் அணி மாநிலத் தலைவர் ஜி. சுகுமாரன் தலைமையிலும், கழகத் தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர், துணைச் செயலாளர்கள் சுப.சரவணன், ஆவின். எம்.ஆறுமுகம். எஸ்.எம். அன்பழகன் (எ) அன்பு, பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் - கழகத் தலைவர், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாசத்துக்கு உரியவரும், முரசொலி இதழின் நீண்ட கால பொறுப்பு ஆசிரியராக இருந்த கழகத்தின் மரியாதைக்குரிய தலைவர்களில் ஒருவராக இருந்து வந்த முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

நவம்பர் 27-ல் பிறந்த நாள் காணும் கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளன்று தமிழ்நாடு முழுவதுமுள்ள மாவட்டத் தொண்டரணி நிர்வாகிகள் ஆங்காங்கே கழகக் கொடியேற்றி தோரணங்கள் கட்டி இனிப்புகள் வழங்கி முத்தமிழறிஞர் கலைஞர், கழகத்தலைவர் தளபதி, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதிஸ்டாலின் ஆகியோரின் புகழ்பரப்பும் பாடல்களையும், எழுச்சியுரைகளையும் ஒலிபரப்பி, விளையாட்டுப் போட்டிகள் நடத்தி நலத்திட்ட உதவிகள் வழங்கி அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை கௌரவிக்கும் வகையில், மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகளைக் கொண்டு பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாட தீர்மானிக்கப்பட்டது.

“நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர்” அவர்களின் பண்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத்திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்து கொண்டாடி வந்த நிலையில் தி.மு.க. தொண்டர் அணி நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மாஸ்டர் பெ. சேகர் தொகுத்த “கலைகளின் இதயம் கலைஞர்” நூல்வெளியீட்டு விழா கடந்த 20.10.2024 அன்று முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.ஆர்.ராஜரத்தினம் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் ஏற்கனவே கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி நிகழ்த்தப் பெற்ற தேசிய உலகச் சாதனை மற்றும் “விழித்தெழுவோம் உறக்கத்தை விட்டு, விலகி நடப்போம் போதை பாதையை விட்டு” என்ற குறும்படம் வெளியிடப்பட்டது. பின்னர், கலைகளின் இதயம் கலைஞர் என்னும் நூலும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வினை கண்டு உரையாற்றிய கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மயிலாப்பூர், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு உள்ளிட்ட சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இங்கே கண்டவையெல்லாம் கலைஞருக்கு செய்யும் காணிக்கை என்றும் தொண்டர் அணி இப்படி ஒரு நிகழ்ச்சியை இதுவரையில் நடத்தவில்லையென்றும் மனதாரப் பாராட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாநிலத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர், மாநிலத் தலைவர் ஜி. சுகுமாரன், துணைச் செயலாளர்கள். சுப. சரவணன், ப. கோமன், ஆவின், எம். ஆறுமுகம், அன்பழகன், பயிற்சியாளர் மாஸ்டர் இ. குருதாஸ் மற்றும் பெரும்பாலான மாவட்டங்களிலிருந்து வருகை தந்து கட்டுக் கோப்போடு இருந்து நிகழ்ச்சிக்கு சிறப்புச்சேர்த்த தொண்டரணி மாவட்டத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி மகிழ்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், நவ. 23 -

நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் இன்று (23.11.2024 - சனிக் கிழமை) காலை 10.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்டக் கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை யில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

- 27.11.2024 அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் பிறந்த நாளினை சிறப்பாக கொண்டாடுவது குறித்து.
- கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கழக இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் நடைபெறும் மருத்துவ முகாம் மற்றும் மாவட்ட இளைஞரணி தி.மு.க. சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் எவ்வாறு செயல்படுவது என ஆலோசனை கூட்டம் ஆலந்தூர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர்.ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு. டி.பிரகாஷ் ஆலோசனை வழங்கினார்கள். உடன் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதிகுணாளன்,பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரவின்குமார்,துணை அமைப்பாளர்கள் ராஜேஷ்,சஞ்சிவி,சந்தோஷ்,விக்கி, ஜாகீர்உசேன், மற்றும் வட்ட இளைஞர் அணிகள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயல் வீரர்கள் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கை!

திண்டிவனம், நவ. 23 -

விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் ப.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசர செயல் வீரர்கள் ஆலோசனை கூட்டம், இன்று (23112024 - சனிக்கிழமை) மாலை 4.00மணியளவில் திண்டிவனம் ஜே.வி.எஸ். திருமண மண்டபத்தில் மாவட்ட அவைதலைவரும்,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர், வனத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்,

எனவே மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் கழகத்தினர்கள்,கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1.கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 28 ஆம் தேதி மாலை திண்டிவனத்தில் மிகச் சிறப்பான வரவேற்பு அளிப்பது சம்மந்தமாக.

2.கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடுதுணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நவம்பர் 27 ஆம் தேதி பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது சம்மந்தமாக.

3.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாவட்ட துணை அமைப்பாளர் லயோலா மதன் தலைமையில் இராயபுரம் கிழக்கு பகுதியில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தலை மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ.டி.சேகர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ. ஜெ.எபிணேசர், ஐட்ரீம்ஸ் ஆர். மூர்த்தி, பகுதி கழக செயலாளர்கள் இரா.செந்தில் குமார், வ. பெ.சுரேஷ், தொகுதி பார்வையாளர் டாக்டர் சுபேர்கான் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.